# லுனுகம்வெஹர பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மே 10 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுலை 06 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜுலை 31 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய லுனுகம்வெஹர பிரதேச சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான லுனுகம்வெஹர பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3..1 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,579,353 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 390,127 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 353,384 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 167 | 2 | - |
| (ii) | குத்தகை வாடகை | 480 | 1,250 | 10 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 474 | 506 | - |
| (iv) | பிற வருவாய் | 7,442 | 6,718 | 276 |

### 2.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2009 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், சபையால் சேகரிக்கப்பட்ட வருவாயினது தோற்றுவாயின் அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) சபையின் சேமிப்புக் கணக்கொன்றில் 2008 தொடக்கம் காசுப் பற்றுதல்கள் எதுவும் மேற்கொள்ளப்படாது 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,085,150 மீதி உள்ளமை அவதானிக்கப்பட்டது. கூடிய வட்டி வருவாயைப் பெறுவதற்காக அதனை நிலையான வைப்பு ஒன்றிலிடுவதற்குக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(ஆ) சபை ஒன்றிணைந்த திட்டத்தையும் செயல் நடவடிக்கைத் திட்டத்தையும் தயாரிக்கவில்லை.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட 44 திட்டங்களில் 11 மாத்திரமே 2011 நவம்பர் 21 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்தன. எஞ்சிய 33 திட்டங்கள் தொடர்பாக குறித்த அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சமுதாய நிறுவனங்களுடன் இணைந்து அத் திட்டங்களை அமுல்படுத்துவற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2011 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட 33 வேலைத் திட்டங்களும் ஆரம்பமாவது தாமதமாயிற்று.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்